**செ.வெ.எண்: 36/2021** **நாள்: 24.08.2021**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

## தென்காசி மாவட்ட, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை மூலம் பயிற்சியில் சேரலாம்

தென்காசி மாவட்டத்தில் உள்ள **தென்காசி, கடையநல்லூர் மற்றும் வீரகேரளம்புதூர்** அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 2021ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை 25.08.2021 முதல் 15.09.2021 வரை நடைபெறவுள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள தொழிற்பிரிவுகளில் சேர 10ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மேலும் பயிற்சியில் சேர வயது வரம்பு 14 வயது முதல் 40 வயது வரை (மகளிருக்கு வயது வரம்பு கிடையாது). பயிற்சியில் சேர விரும்பும் பயிற்சியாளர்கள் அசல் மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டை, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ உள்ளிட்ட ஆவணங்களுடன் மேற்காணும் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் விருப்பமுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தினை நேரில் அணுகவும். பயிற்சியில் சேருவோருக்கு அரசு கல்வி உதவித்தொகை மாதம் ரூ750/-, விலையில்லா மடிக்கணிணி, மிதிவண்டி, சீருடைகள், தையற்கூலி, மூடுகாலணிகள் மற்றும் வரைபட கருவிகள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு, தென்காசி ITI, வீரகேரளம்புதூர் ITI, கடையநல்லூர் ITI முதல்வரை நேரில் அனுகலாம். இத்தகவலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தென்காசி, வீரகேரளம்புதூர் மற்றும் கடையநல்லூர் முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**